இடத்தை எடுத்து, அல்லது அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்து எடுக்கவும், விழுந்த பள்ளிக்கட்டிடத்தை கட்டவும், இந்த பள்ளிக்கூடம் தொடர்ந்து நடக்கவும், இதிலுள்ள 25 ஆசிரியர்கள், பயிலுகிற 750 மாணவர்கள் இவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும் துரிதமாக அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்தப் பள்ளியின் நிர்வாகியின் நடவடிக்கையின் விளைவாக, விழுந்த பள்ளிக் கட்டிடங்கள் கட்டப்படவில்லை. இதிலுள்ள மாணவர்கள் சத்திரங்களிலும் பல வீடுகளிலும் சென்று பயிலக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கவனத்தில் எடுத்துக்கொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதில் துரிதமாகவும், விரைவாகவும் நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும். அவ்விதம் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இது ஆரம்ப கல்வியைச் சேர்ந்த பள்ளியாக இருப்பதால் நகராட்சி இதை எடுத்து நடத்த வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதற்கான கருத்து அரசின் பரிசீலனையில் இருக்கிறது. எனவே, அரசாங்கம் இதில் ஆவன செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து. அரசினர் சட்ட முன்வடிவுகள், தமிழ்நாடு 1978-ம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன் வடிவு. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள்,

திரு. சி. கோவிந்தராஜன்; பேரவைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். நேற்றைய தினம் இங்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சில சலுகைகளை வழங்கினார்கள். அதிலே காம்பன்ஸேஷன் அலவன்ஸ் பற்றியும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்னை எந்த நேரத்தில் எழுப்புவது என்றிருக்க வேண்டும். ஒரு அமைச்சரை நான் பேச கூப்பிட்டதற்குப் பிறகு இதை எழுப்புவது சரியல்ல. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்கள்.

(7) அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) தமிழ்நாடு, 1978 ஆம் ஆண்டு, கடன் நிவாரணச் சட்டங்கள் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன் வடிவு.

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR : Sir, I Move; "That leave be granted for the introduction of the Tamil Nadu debt Relief Laws (Second amendment) Bill, 1978."

1978 மார்ச் 31] [Thiru K. Narayanaswami Mudaliyar]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

The Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIYAR : Sir, I introduce the Bill.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 10–30)

(3) ஒழுங்குப் பிரச்னைகள்—தொடர்ச்சி

(ஆ) உறுப்பினர்களுக்கு அரசு வழங்கியுள்ள கூடுதல் ஈட்டுப் படியை திராவிட முன்னேற்றக் கழகம் வாங்கப்போவதில்லை என வெளியில் அறிவிக்கப்பட்டதும் அது தொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களும் அந்த கூடுதல் படியையும் தொலைபேசி வசதிக்காக அறிவிக்கப்பட்ட கூடுதல் படியையும் வாங்கப்போவதில்லை என்பது குறித்து

* திரு. சி. கோவிந்தராசன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்னை. நேற்றைய தினம் இங்கே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சலுகைகள் சிலவற்றை வழங்கினார்கள். அதன்படி, காம்பன்சேடரி அலவன்சு ஏற்கெனவே இருப்பது 200 ரூபாய் என்பது 350 ரூபாயாகவும், டெலிபோனுக்கு 100 ரூபாய் என்பது 150 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. அந்தச் சமயத்திலே நான் எழுந்து கூறினேன். என். ஜி. ஓக்களுக்கு ஊதியக் குழு பரிந்துரை செய்யப்போவதாகச் சொல்கிறார்கள். இதைத் தவிர, இங்கே பணியாற்றக் கூடிய பணியாளர்களுடைய பணி நிரந்தரமாக்கப்படவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்; நோ. பாயிண்ட் ஆப் ஆர்டர். எழுதி அனுப்புங்கள்.

திரு. சி. கோவிந்தராசன்; நான் இந்தப் பிரச்னையைச் சொல்லி விடுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்; இதிலே ஒழுங்குப் பிரச்னைக்கே வழி இல்லை.......

*திரு. சி. கோவிந்தராசன்; சட்ட மன்றத்திலே சலுகைகள் அறிவிக்கும்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர், துணைத் தலைவர் ஆகியவர்கள் இங்கே இருந்தார்கள். ஆனால், வெளியிலே அவர்களுடைய சட்ட மன்றக் குழு கூடி, நாங்கள் இந்த காம்பன்